# திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்

## அப்பா கட்டுரைகள்


| வரிசை எண் | தலைப்பு | போர்டு எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஏழை மாணவர்களுக்கு வாரி வழங்கிய வள்ளல் | 2 |
| 2 | Take care of them, My Lord | 2 |
| 3 | மனித சேவையை பெரிது என வாழும் சொற்கலிங்கம்! | 2 |
| 4 | மாற்றுத்திறனாளிகளின் நம்பிக்கை நட்சத்திரம் திரு S. ராமகிருஷ்ணன் | 2 |
| 5 | காஷ்மீரில் ஒரு நாள் | 2 |
| 6 | மனிதநேயம் | 3 |
| **போர்டு எண்ணிக்கை மொத்தம்** | | 13 |

# ஏழை மாணவர்களுக்கு வாரி வழங்கிய வள்ளல்

விராலிமலை அரசு தொடக்கப்பள்ளியில் ஒரு நாள் மாணவ-மாணவிகளுக்கு வழக்கம்போல் ஆசிரியர்கள் பாடம் நடத்திக் கொண்டிருந்தனர். அப்போது காவி உடையணிந்து ஒரு முதியவர், பள்ளி வளாகத்திற்குள் நுழைந்தார். அங்கிருந்த ஆசிரியர் ஒருவரிடம், தலைமை ஆசிரியரை சந்திக்க வேண்டும் என்று கூறினார். அந்த முதியவரை தலைமை ஆசிரியரின் அறைக்கு அழைத்துச் சென்றார் அந்த ஆசிரியர்.

மிகுந்த பணிவுடன் தலைமை ஆசிரியரை வணங்கிய அந்த முதியவர், தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, என்ன காரணத்திற்காக பள்ளிக்கு வந்தேன் என்ற தகவலை கூறியபோது, தலைமை ஆசிரியர் மட்டுமல்லாமல், சுற்றியிருந்த ஆசிரியர்களும் ஒரு நிமிடம் நெகிழ்ந்து போய் அந்த முதியவரை வியப்புடன் பார்த்தனர். அப்படி அவர் என்ன கூறினார் என்று கேட்கிறீர்களா?

ஐயா, நான் ஒரு பிச்சைக்காரன். கோயில் வாசலில் அமர்ந்து பக்தர்கள் தரும் பணத்தை சிறுக, சிறுக சேமித்து வைத்துள்ளேன். தற்போது என்னிடம் ரூ.10 ஆயிரம் உள்ளது. இந்த பணத்திலிருந்து ஏழை மாணவ, மாணவிகளுக்கு என்னென்ன தேவையோ அதை வாங்கித்தர தயாராக இருக்கிறேன். பள்ளிக்கு என்ன உபகரணங்கள் வேண்டுமோ, அதையும் இந்த பணத்திலிருந்து நீங்கள் வாங்கிக் கொள்ளலாம். தயவுசெய்து மறுப்பு தெரிவித்து என்னை வெளியே அனுப்பாமல், இந்த உதவியை செய்து தர அனுமதிக்க வேண்டும், என்று கூறியவுடன், அங்கிருந்த அனைவரும் அவரை மரியாதையுடன் பார்க்கத் தொடங்கினர்.

அதன் பின்பு அந்த முதியவரின் குடும்ப பின்னணி நிகழ்வுகளைக் கேட்டு தெரிந்து கொண்ட ஆசிரியர்கள் அனைவருமே கண்கலங்கினர்.

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே உள்ள ஆலங்குளம் கிராமத்தைச் சேர்ந்த பாண்டியன் மிகச்சிறந்த உழைப்பாளி. இவரது 2 மகள்கள், ஒரு மகனை படிக்க வைத்து அவர்களுக்கு வேலையும் வாங்கி கொடுத்து திருமணமும் செய்து வைத்தார். அதன் பின்னர் 55வது வயதில் அவரது மனைவி இறந்தவுடன்

தனியாளாக நின்ற அவருக்கு வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டது. மகன் மற்றும் மகள்களை தொந்தரவு செய்ய வேண்டாம் என்று நினைத்த அவர், கட்டிய வேட்டியுடன் திருச்செந்தூருக்குச் சென்றார்.

அங்கு கோயில் வாசலில் அமர்ந்து பிச்சை எடுத்து சாப்பிட்ட அவர், தொடர்ந்து பழநி, ராமேஸ்வரம் போன்ற கோயில்களுக்குச் சென்று வளாகத்தை சுத்தம் செய்து கொடுப்பது போன்ற வேலைகளை செய்து வந்தார். அவ்வப்போது பிச்சை எடுத்த பணத்தை சேமித்து வைத்திருந்த அவர், தனது மகன், மகள்களை பார்க்கும் ஆசையில் சென்ற போது அவர்கள், இவரது வருகையை பிடிக்காமல் விரட்டியடித்தனர். வேதனையில் நொந்து போன அவர் மீண்டும் கோயில்களில் தஞ்சம் அடைந்தார். இருப்பினும் பிறருக்கு உதவி செய்து பழக்கப்பட்ட அவரால், பணத்தை பாதுகாத்து வைத்திருப்பது சுமையாகத் தெரிந்தது.

அப்போது அந்த வழியாக அரசு பள்ளிகளுக்கு சென்று கொண்டிருந்த ஏழை குழந்தைகள் அவரது கண்ணில் பட்டனர். அன்றிலிருந்து எந்த ஊரில் உள்ள கோயிலில் பிச்சை எடுத்தாலும் அதிலிருந்து கிடைக்கும் பணத்தை அந்த ஊரில் உள்ள அரசுப் பள்ளி மாணவ-மாணவிகளுக்கு செலவு செய்வதை கொள்கையாகக் கொண்டிருந்தார். புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் கடந்த சில மாதங்களாக தங்கியிருந்த அவர், பிச்சை எடுத்து சேமித்த ரூ.10 ஆயிரத்தை எடுத்துக்கொண்டு அரசு தொடக்கப்பள்ளிக்கு வந்திருப்பதாக கூறியபோது ஆசிரியர்கள், அவரை மனதார வாழ்த்தினர். தொடர்ந்து, அந்த பள்ளிக்கு சிறிய அளவிலான டேபிள், 150 குழந்தைகளுக்கு பேனா, பென்சில், ரப்பர் என அவர்கள் கேட்ட அனைத்தையும் வாங்கிக் கொடுத்து விட்டு மிகுந்த மனநிறைவோடு அனைவருக்கும் நன்றி தெரிவித்து விட்டு அடுத்த கோயிலுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

பிறருக்கு உதவி செய்ய மனமிருந்தால் போதும், பொருள் தானாக வந்து சேரும் என்பதற்கு முதியவர் பாண்டியன் ஒரு உதாரணம் என்று ஆசிரியர்கள் அவரை சுட்டிக்காட்டி, மகிழ்ச்சியில் திளைத்திருந்த ஏழை மாணவர்களிடம் அறிவுறுத்தி கொண்டிருந்தனர்.

*******

# Take care of them, My Lord

There were days when my home used to be filled with laughter, arguments, fights, jokes and loads of mischief.

Books used to be strewn all over the show. Pens and books all over and clothes messing the rooms, thrown on the beds.
I used to shout at them to clean up their mess.

In the morning, one will wake up and say :
"Mama, I can't find a certain book."
And the other will say : "I can't find my perfume."
And one will say : "Mama where's my homework?"

Everyone used to ask about their lost possessions.
And I will say, “take care of your stuff, be responsible, you have to grow up”

And today I stand at the doorway of the room.
The beds are empty.
All the cupboards have only a few pieces of clothes in them.
And what remains is the smell of perfume that lingers in the air.
Everyone had a special smell.
So, I take in the smell of their perfume for may be it will fill the empty ache in my heart.

All I have now is the memory of their laughs and their mischief and their warm hugs.

Today my house is clean and organized and everything is in its place, and it is calm and peaceful.

But it is like a desert with no life it it. Do not become angry with your kids about the mess.

Every time they come to visit and they spend time with us. When they are ready to leave, they pull their bags and it is as if they tug my heart along with it.

They close the door behind them and then I stand still and think of the many times I shouted at them to close the doors.

Here I am today, closing my own doors. Nobody opens it besides me. Each one gone to a different city or a different country.

All left to find their own path in life.

They have grown up and I wished that they could stay with me forever.

Oh! God..

Take care of them and all other children wherever they may be, because you are their guide and their protector …. And always keep them happy.

★ ★ ★

# மனித சேவையே பெரிது என வாழும் சொக்கலிங்கம்!

"நான் உயர் கல்வி படிக்கல, இலக்கியம் படிச்சதில்ல, கோயிலுக்கு போனதில்லை, தியானம் செய்ததில்லை, ஆன்மீகம் தெரியாது, அரசியல்ல இறங்கல, ஜாதி மதம் பார்க்கிறதில்ல, யாரையும் எதிரியா நினைச்சதில்ல, சொத்து ஏதும் சேர்க்கல, நண்பர்கள் பெருகுவதைத் தவிர்ப்பதில்லை". அட்டகாசமாக தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறார் சொக்கலிங்கம்.
படித்தது நாலாம் வகுப்புதான். ஈரோடு மாவட்டம் சென்னிமலையைச் சேர்ந்த இவரை ஈரோடு மட்டுமின்றி நாமக்கல், சேலம் என பக்கத்து மாவட்ட மக்களுக்கும் நன்கு தெரிந்திருக்கிறது. சாலையில் முதியவர் யாராவது பசியால் சுருண்டு கிடக்கிறார்களா, மனநலம் பாதித்த யாராவது சாக்கடையில் விழுந்து கிடக்கிறார்களா, யாரையாவது அருவருப்பு என்று சொல்லி சொந்த பந்தங்களே ஒதுக்கி வைத்திருக்கிறார்களா, உடனே 'சொக்கலிங்கத்துக்கு போன் போடு' என்கிறார்கள். அத்தனை பேருக்கும் ஆபத்பாந்தவனாய் இருக்கிறார் சொக்கலிங்கம்.

"கஷ்டப்படறவங்கள பத்தி இப்படி போன்கால் வந்தா மனசு பதறுது சார்.. உடனே, நெசவு வேலையை அப்படியே விட்டுட்டு சம்பந்தப்பட்ட இடத்துக்க கிளம்பி விடுவேன். நல்ல காரியத்துக்குத்தானே போறான்னு முதலாளியும் ஏதும் சொல்றதில்லை. கையில காசிருந்தா யோசிக்க மாட்டேன். இல்லாட்டி கைத்தறி கூட்டுறவு சங்க மேனேஜர்கள் யாருக்காச்சும் போன் போட்டு பணம் கேட்பேன். அவங்களும் ஆள்போட்டு பணத்தை குடுத்து விடுவாங்க. அவங்க மட்டுமில்ல, நான் கேட்டா யாருமே இல்லைன்னு சொல்றதில்லை. பாதிக்கப்பட்டவங்க எங்க இருக்காங்களோ அங்கேயே போயி, அவங்களை சுத்தப்படுத்தி, பேருந்துலேயோ, இல்ல வேறு ஏதாவது வாகனத்திலேயோ ஏத்தி அவங்களுக்காக இருக்கிற ஹோமுக்கு கோண்டு போய் விட்டுட்டு வருவேன்.

கேன்ஸர், எய்ட்ஸ் நோயாளிகளை உறவுகளே ஒதுக்கி வைச்சிடுறாங்க. அவங்களே எனக்கு போன் போட்டு 'இவங்கள எங்கயாச்சும் ஹோம்ல சேர்த்திருங்கன்'னு சொல்றப்ப மனசு லேசா வலிக்கும். என்னடா உலகம்னு எனக்கு நானே நொந்துகிட்டு, அவங்கள பத்திரமா கொண்டுபோய், ஹோம்ல சேர்த்திட்டு வருவேன். யாராச்சும் கவனிப்பாரில்லாம இருக்கிறதா, பேப்பர்ல செய்தி பார்த்தாக்கூட, உடனே ஓடிடுவேன். தினமும் யாருக்காச்சும் உதவி செஞ்சாத்தான் ராத்திரி தூக்கம் வருது.

இன்னக்கி நேத்து இல்ல, சின்ன வயசுலருந்தே இப்படித்தான். ஒரு சமயம், எங்கூட படிச்ச பையன், வீட்டுல அரிசி இல்லைன்னு, சாப்பாடு கொண்டு வரல. என் சாப்பாட்டை அவனுக்குக் கொடுத்துட்டு, எங்க ஆத்தாகிட்ட அழுது அடம்பிடிச்சு ரெண்டு படி அரிசி வாங்கி அவனுக்குக் கொடுத்தேன்". வெள்ளையாய் சிரிக்கிறார் சொக்கலிங்கம்.

சோறு போடும் தொழிலை பகுதி நேரமாகவும், நேசக்கரம் நீட்டும் சேவையை 'சமூக சேவை இல்லம்' என்ற பெயரில் முழுநேரமும் செய்கிறார். தனது சேவைக்கு குடும்பம் குறுக்கே நிற்கக் கூடாது என்பதற்காக திருமணமே வேண்டாம் என்று இருந்தாராம். ஆனால், அது நடக்க வில்லை. புற்று நோயால் பாதிக்கப்பட்ட தனது அக்காவின் கடைசி ஆசையை நிறைவேற்ற, அவரது மகளை திருமணம் செய்திருக்கிறார்.

தேசிய நதிகளை இணைக்க வலியுறுத்தி, சென்னிமலையிலிருந்து டெல்லி வரை 2004ல் சைக்கிள் பயணம் போயிருக்கிறார் சொக்கலிங்கம். அது குறித்தும் அக்கறையோடு பேசியவர், "நதிகளை இணைச்சாத்தான் விவசாயி பொழைக்கலாம். அவன் பொழைச்சாத்தான் நாடு செழிக்கும். நான் சைக்கிள் பயணம் போறன்னு எஸ்.கே.எம். மொதலாளி மயிலானந்தம் சார் எனக்கு புதுசா ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுத்தார். அப்ப எஸ்.பி.யா இருந்த பாலசுப்ரமணியன் பாராட்டுக்கடிதம் கொடுத்தாரு. அதை வைச்சே நாடு முழுக்க அத்தனை போலீஸ் ஸ்டேஷன்லயும் தங்கிக்கிட்டேன். 2850 கி.மீ. சைக்கிள் பயணத்தை முடிச்சிட்டு அப்ப குடியரசுத்தலைவராக இருந்த அப்துல் கலாம் ஐயாவையும் சந்திச்சு பேசிட்டு வந்தேன்" என்று நெகிழ்கிறார்.

தொழிலை விட்டுட்டு சேவைக்காக அலைந்ததால், சில வருடங்களுக்கு முன்பு வீட்டை அடமானம் வைத்து அதை மீட்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறார் சொக்கலிங்கம். கடைசியில், இவரைப்பற்றி தெரிந்தவர்கள், பண உதவி செய்து வீட்டை மீட்டுக் கொடுத்திருக்கிறார்கள். இந்த சம்பவத்துக்குப் பிறகு சொக்கலிங்கத்தின் பெயரில் இருந்த வீட்டை அவரது மனைவி பெயருக்கு மாற்றி விட்டார்களாம் உறவுக்காரர்கள்.

'ஒரு தொண்டு நிறுவனம் ஆரம்பித்து அதன் மூலம் சேவையை தொடரலாமே' என்று கேட்டதற்கு 'அதுக்குத்தான் ஆயிரம் பேர் இருக்காங்களே.. அப்படி எல்லாம் போனால் பணம் அது இதுன்னு வர ஆரம்பிக்கும். நோக்கம் பாழாகிப் போகும். நான் இப்படியே இருந்துட்டு போயிடுறேன். அதுதான் நிம்மதி' என்கிறார் சொக்கலிங்கம். என்ன ஒரு மனித நேயம்..!

*****

# மாற்றுத்திறனாளிகளின் நம்பிக்கை நட்சத்திரம்
# திரு. S. ராமகிருஷ்ணன்

தாம் வாழ்வதே வீண் என்று வாழ்க்கையில் விரக்தியுற்றவர்கள், தம் வாழ்நாளில் ஒரு முறை அவசியம் சென்று பார்க்க வேண்டிய தலம் தென்காசி ஆய்க்குடியிலுள்ள அமர் சேவா சங்கம்.

அப்படி என்ன உள்ளது அங்கே?

சென்று பாருங்கள். எண்ணற்ற மாற்றுத்திறனாளிகள், வாழ்க்கைக் குறித்து சிறிதும் அச்சமின்றி புன்னகை பூத்த முகத்தினராய், தன்னம்பிக்கையுடன் தேனீக்கள் போல சுறுசுறுப்பாய் செயல்படுவதைக் காண்பீர்கள். காணும்போதே உங்கள் கண்கள் குளமாகிவிடும்.

அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி அவர்களை சமுதாயத்துடன் ஒருங்கிணைத்தது யார்? விடையறியும் போது மிக ஆச்சரியம்தான்.

ஆம்! இதற்கு காரணம் மாற்றுத்திறனாளி திரு.S. ராமகிருஷ்ணன். "கழுத்திற்குக் கீழே எனது எந்த உறுப்பும் செயல்படாது. பிறர் உதவியின்றி என்னால் செயல்பட இயலாது". புன்னகை பூத்த முகத்துடன் அவர் கூறுவதை கேட்கும்போது கல் நெஞ்சினரும் கலங்கிடுவர்.

இது எவ்வாறு நிகழ்ந்தது?

மற்ற இளைஞர்கள் போல தமது 20 வயது வரை திரு. ராமகிருஷ்ணன் நல்ல உடல் நலத்துடன்தான் இருந்தார். கோயம்புத்தூர் GCT-ல் 4-ஆம் ஆண்டு பொறியியல் படித்துக் கொண்டிருந்த நிலையில், பெங்களூரில் நடைபெற்ற கடற்படை அதிகாரிகள் தேர்வுக்கான நேர்காணலில் உயரமான மரத்திலிருந்து கீழே குதித்தபோது, 10.01.1975 அன்று விபத்திற்குள்ளானார். தண்டுவடம் பாதிக்கப்பட்டு, பெங்களூர் விமானப்படை மருத்துவமனை, பூனே கிர்க்கி ராணுவ மருத்துவமனைகளில் 20 மாதங்கள் ஏர்மார்ஷல் அமர்ஜித் சாஹூல் அவர்களிடம் சிகிச்சை பெற்றார். உயிர் பிழைத்தார். ஆனால் கழுத்திற்குக் கீழே அவரது உறுப்புகள் செயல் இழந்தன. என்ன செய்வதென்றே புரியாத நிலையில் சில ஆண்டுகள் கழிந்தன. பின்னர் 1981ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் நல்வாழ்விற்காக, தனக்கு மருத்துவம் செய்த டாக்டரின் பெயரால் "அமர் சேவா சங்கத்தை தொடங்கினார். 1981ஆம் ஆண்டு 5 மாற்றுத்திறனாளிகளுடன் சிறிய அளவில் தொடங்கப்பட்ட இந்நிறுவனம் 32 ஏக்கரில் பெரியதாக வளர்ந்து,

இன்று சுலோச்சனா கார்டன் வளாகத்திலும், மற்றும் 6 வட்டாரங்களிலும் செயல்படுகிறது.

மேலும் சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு பணிகளுக்காக சுமார் 13,000 மாற்றுத்திறனாளிகள் இந்நிறுவனத்தின் சேவைகளை பயன்படுத்திக் கொள்ளும் ஒரு பெரிய குடும்பமாக வளர்ந்துள்ளது.

மாற்றுத்திறனாளிகளின் மனோதிடத்தைத் பலப்படுத்தி, அவர்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டி, அவர்களை சமுதாயத்துடன் ஒருங்கிணைக்கும் குறிக்கோளுடன், தோற்றுவிக்கப்பட்ட அமர் சேவா சங்கத்தில், மற்றொரு மாற்றுத்திறனாளியான பட்டயக் கணக்காளர் திரு.S. சங்கரராமன் இணைந்து செயலாளராக தன்னலமற்ற சேவை புரிந்து வருகிறார். இவரது மூத்த சகோதரி பேராசிரியை முனைவர் s.சுமதி அவர்கள் திருச்சி சீதாலட்சுமி ராமசாமி கல்லூரியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்று இப்புனித சேவைகளில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். இவரும் ஒரு மாற்றுத்திறனாளி ஆவார். இவர்கள் சேவையில் எண்ணற்ற பணியாளர்களும், தன்னார்வத் தொண்டர்களும் இணைந்துள்ளனர்.

கல்விக் கூடங்கள், மருத்துவ மனைகள், பரிசோதனைக் கூடங்கள், பயிற்சி நிலையங்கள், உணவுக்கூடம், தொழிற்கூடங்கள் என பலவற்றை உள்ளடக்கிய அமர் சேவா சங்கத்தின் பணி மிகவும் போற்றத்தக்கது.

ஆய்க்குடியில் தோன்றிய நம்பிக்கை நட்சத்திரம் திரு. S. ராமகிருஷ்ணன் இன்று திருநெல்வேலி மாவட்டத்திற்கு மட்டுமல்லாமல் ஒன்றுபட்ட இந்தியத்திருநாட்டிற்கே வாழ்க்கையில் விரக்தியற்றோருக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் தன்னம்பிக்கை ஒளியேற்றி வைத்துக் கொண்டிருக்கிறார். இவ்வரிய தொண்டினைப் பாராட்டி வாழ்நாள் சாதனையாளர் உள்ளிட்ட பல பட்டங்கள் அவரை அடைந்து பெருமை பெற்றுள்ளன.

அனைவரின் வாழ்க்கையிலும் தன்னம்பிக்கையை விதைத்து வரும் ஆய்க்குடி அமர் சேவா சங்கத்தினை அனைவரும் அவசியம் சென்று காண வேண்டும். குறிப்பாக வாழ்க்கையில் விரக்தியுற்றோர் அங்குச் சென்று, அங்குள்ள மாற்றுத்திறனாளிகள் தங்கள் குறைபாட்டினை மறந்து எவ்வாறு தன்னம்பிக்கையோடும், மகிழ்ச்சியோடும் வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதைக் காண வேண்டும். கண்டால், இருகோடுகள் தத்துவப்படி தமக்கு கிடைத்திருக்கும் வாழ்க்கை எவ்வளவு உன்னதமானது என்பதை உணர்ந்து வாழ்வில் பற்று வைப்பர்.

*******

# காஷ்மீரில் ஒரு நாள் ...

ஆள் நடமாட்டம் இல்லாத அந்த சாலையில், அந்தப்பெண் நடந்து சென்று கொண்டிருந்தார்.

அருகிலேயே அவளது கணவர்... தூக்க முடியாமல் ஒரு பெரிய மூட்டையை தோளில் தூக்கி சுமந்தபடி அந்தப்பெண்ணுக்கு துணையாக வந்து கொண்டிருந்தார்.

இவர்கள் இருவரைத் தவிர அந்த சாலையில் ஒரு ஈ.. காக்கா கூட இல்லை. காரணம் ஊரடங்கு உத்தரவு. கடைகள் எல்லாம் அடைக்கப் பட்டு விட்டன. போக்குவரத்து அடியோடு நிறுத்தப்பட்டு விட்டது. காஷ்மீர் தலைநகரமான ஸ்ரீநகரில் சென்ற ஆண்டு (ஜூன் 2016) நடந்தது இது.

தடுத்து நிறுத்தினார்கள் போலீஸ்காரர்கள். "எங்கே போகிறீர்கள்?"

"முக்கியமான வேலையா ஜவகர் நகருக்கு போகிறோம்". "முக்கியமான வேலையா..? அதுவும் நீங்கள் போகும் இடம் கலவர பூமி. இந்த நேரத்தில் அங்கு போக உங்களுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது?

"பஸ், ஆட்டோ எதுவும் ஓட வில்லை. எப்படி நடந்து போவீர்கள் அவ்வளவு தூரம்?

"போய் விடுவோம்.." கணவனும் மனைவியும் சேர்ந்தே சொன்னார்கள்.

இவர்கள் பிடிவாதத்தைக் கண்டு கோபம் கொண்டார் அந்த போலீஸ்காரர். "சந்தேகப்படும்படி யாராவது சாலையில் போனால் கண்டவுடன் சுடச்சொல்லி எங்களுக்கு உத்தரவு தெரியுமா?"

"தெரியும்.."

"அது மட்டும் அல்ல. இந்துக்களும் முஸ்லீம்களும் அங்கங்கே மோதிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கலவரக்காரர்கள் கண்ணில் பட்டால் உங்கள் கதையையே முடித்து விடுவார்கள்.."

அந்தப் பெண் உறுதியாக சொன்னாள். "அதுவும் தெரியும். ஆனாலும் நாங்கள் போய்த்தான் ஆக வேண்டும். மிக மிக முக்கியமான வேலை." எனக்கூறி நடக்க ஆரம்பித்தனர்

இடையில் பல இடங்களில் போலீஸ் அவர்களை மறித்தது. மீண்டும் மீண்டும் எச்சரித்தது.

அதையும் மீறி கணவனும் மனைவியும் வெறிச்சோடிய அந்த சாலைகளில் பகல் முழுவதும் நடந்தார்கள். பல கிலோ மீட்டர் நடந்து ஜவகர் நகரை அடைந்தார்கள்.

எல்லா வீடுகளும் இறுக்கமாக மூடப்பட்டிருந்தன. இந்த தம்பதிகள் தேடிச்சென்றது பண்டிட்ஜி வீடு.

"நில்லுங்கள்.." திரும்பிப்பார்த்தார்கள்.

காவல்துறை அதிகாரியுடன் சேர்ந்து ஒரு பெரிய போலீஸ் பட்டாளமே அங்கு நின்றது.

"உங்கள் தோளில் இருக்கும் பெரிய மூட்டைக்குள் என்ன ஆயுதங்களை வைத்திருக்கிறீர்கள்? அதை கீழே இறக்குங்கள்.."

இறக்கினார்கள். போலீஸ்காரர்கள் அதை எச்சரிக்கையுடன் திறந்து பார்த்தார்கள். திகைத்துப் போனார்கள்..!

எல்லாமே உணவுப் பொருட்கள். "யாருக்கு இதை கொண்டு போகிறீர்கள்?"

அந்தப்பெண் சொன்னார். "இந்த ஜவகர் நகரில் இருக்கும் பண்டிட்ஜி வீட்டிலிருந்து என் தோழியும் சக ஆசிரியையுமான பண்டிட்ஜியின் மனைவி போன் செய்து 'ஹலோ..! இங்கே ஜவகர் நகரில் நிலைமை ரொம்பவும் மோசமாக இருக்கிறது. கடைகள் அடைக்கப்பட்டு பல நாட்களாகி விட்டன. வெளியில் செல்ல முடியவில்லை. வீட்டிலும் உணவுப்பொருட்கள் எதுவும் இல்லை. பாட்டியம்மா வேறு படுத்த படுக்கையாக இருக்கிறார்கள். தொலைபேசி வேறு வேலை செய்ய வில்லை. இப்போதுதான் இணைப்பு கிட்டியது. நான்கு நாட்களாக நாங்கள் யாரும் எதுவும் சாப்பிடவில்லை. உயிரை கையில் பிடித்துக் கொண்டிருக்கிறோம். நாளை நாங்கள் உயிரோடு இருப்பது கூட சந்தேகமே." போன் பேசிக்கொண்டிருக்கும் போதே கட் ஆகி விட்டது.

இங்கே ஸ்ரீநகரில் இந்தப் பெண்ணும் அவரது கணவரும் தவித்தார்கள்... துடித்தார்கள். நான்கு நாட்களாக பட்டினியா? எப்படி பண்டிட்டின் குடும்பத்துக்கு உதவுவது...?"

வீட்டில் இருந்த கோதுமை, அரிசி, பருப்பு, காய்கறிகள், மசாலா பொருட்கள் எல்லாவற்றையும் பெரிய மூட்டையாக கட்டி தன் கணவனின் தலையில் வைத்துக்கொண்டு நடந்தே ஜவகர் நகருக்கு வந்திருக்கிறோம்" என்று சொல்லி முடித்தார் அந்தப்பெண்.

கலங்கி விட்டார் அந்த காவல்துறை அதிகாரி. "ஒரு நட்புக்காக உயிரை பணயம் வைத்து பல கிலோ மீட்டர்கள் நடந்தே வந்திருக்கிறீர்கள்.. அதுவும் இந்த மூட்டையை சுமந்து கொண்டு! பாராட்டுகிறேன் அம்மா.. சரி உங்கள் குடும்ப நண்பர் பண்டிட் வீடு எங்கே இருக்கிறது.?"

"அடுத்த தெருவில்தான்.."

"வாருங்கள். நானே பத்திரமாக வீடு வரை வருகிறேன்.."

காவல்துறை அதிகாரியே சென்று பண்டிட் வீட்டு கதவை தட்டினார். கதவு மெல்ல திறந்தது. உள்ளே இருந்து வந்த பண்டிட்டும் அவரது மனைவியும் இந்த தம்பதிகளை பார்த்தவுடன் ஆச்சரியத்தில் "அட கடவுளே!.. இது என்ன? எப்படி இவ்வளவு தூரம் வந்தீர்கள்? முதலில் உள்ளே வாருங்கள்.."

தோழியர் இருவரும் கட்டித்தழுவிக் கொண்டார்கள். கண்ணீர் வடித்தார்கள்.

போலிஸ் அதிகாரி, "நான் உங்கள் பெயரை தெரிந்து கொள்ளலாமா மேடம்?"

அந்த ஸ்ரீநகர் பெண் சிரித்தபடி சொன்னார்.. "சுபைதா பேகம்..".

ஆம். இந்து முஸ்லீம் கலவரம் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த அந்த நேரத்தில்.. பசியால் துடித்துக் கொண்டிருந்த பண்டிட் என்ற ஒரு இந்து மனிதரின் குடும்பத்துக்கு, தேடிச்சென்று உணவு கொடுத்து உதவியது சுபைதா பேகம் என்ற ஒரு முஸ்லீம் குடும்பம்தான்.

இப்படிப்பட்ட மனித நேயம், மத நல்லிணக்கம் கொண்ட மனிதர்கள் இருக்கும் வரை, அந்த ஆண்டவனே வந்தால் கூட இந்தியாவில் மத பிரிவினையை உருவாக்க முடியாது..!

வாழ்த்துக்கள்.. எங்கள் இனிய சகோதரி.. சுபைதா பேகம் அவர்களே..!

*****

# மனிதநேயம்..

பூட்டிய கிரில்லுக்கு அப்பால், ஒரு பெரியவர் கசங்கிய சாதாரண வேட்டி சட்டை முகத்தில் கருப்பும் வெள்ளையுமாக மண்டிய ரோமக்காடு. நீண்ட பயணத்தால் களைத்த முகம், கையில் நகைக்கடை விளம்பரத்துடன் இருந்த ரெக்சின் பையுடன் நின்றிருந்தார்.

அவர் கையிலிருந்த சீட்டை பார்த்தான்.

"ஆனந்த், நம்பர் 8, யோகானந்தம் நகர்?"

"ஆமாம். இதுதான். நான்தான் ஆனந்த். நீங்க.. என்ன வேணும்?"

அவர் வறண்ட உதடுகளை, நாவால் ஈரப்படுத்திக்கொண்டார்.

"நான் உங்கப்பாவோட நண்பன். காரைக்காலிலிருந்து வர்றேன். உங்கப்பா லெட்டர் கொடுத்து அனுப்பியிருக்கார்."

பெரியவர் ரெக்சின் பை ஜிப்பை திறந்து ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினார்.

வாங்கிப்பார்த்த ஆனந்த "அப்பாவா..?" என்று வினவியபடி கடிதத்தைப் படித்தான்.

அதில், "அன்புள்ள ஆனந்துக்கு! அப்பா எழுதுவது. ஆசிர்வாதம். கடிதம் கொண்டு வரும் ராமசாமி என் நண்பன். ரொம்ப கஷ்ட ஜீவனம். இவரது ஒரே பிள்ளை சமீபத்தில் விபத்தில் இறந்து விட்டான். விபத்துக்கான இழப்பீடு கிடைத்தால் ராமசாமியும், அவர் மனைவியும் வாழ, ஓரளவாவது உதவியாக இருக்கும்.

விபத்து சம்பந்தமான போலீஸ் விசாரணை, விபத்து ஏற்படுத்திய டிராவல்ஸ் வேன் உரிமையாளர் தர ஒப்புக்கொண்ட இழப்பீடு போன்ற சகல விவரங்களையும் சேகரித்து அவரிடம் கொடுத்தனுப்பி இருக்கிறேன். சென்னையில், தலைமை அலுவலகத்தில் தருவார்களாம்.. சென்னை அவருக்கு புதிது. நீ கொஞ்சம் அவருக்கு உதவி செய்தால் நல்லது. செய்வாய் என்று நம்புகிறேன். மற்றபடி உடம்பை பார்த்துக்கொள்.

பொங்கலுக்கு கண்டிப்பாக ஊருக்கு வர வேண்டும். உன் அப்பா பரமேஸ்வரன்", என்று எழுதப்பட்டிருந்தது.

ஒரு வினாடி யோசித்த ஆனந்த், சட்டென சாவி எடுத்து வந்து கேட்டைத் திறந்தான்.

"வாங்க சார் உட்காருங்க.." என்றவன், டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான்.

தயங்கியபடி உள்ளே வந்த ராமசாமி, தண்ணீரை வாங்கிப் பருகினார்.

"சாப்பிட்டீங்களா..?"

"இல்லே. வழியிலே இரண்டு வாழைப்பழம் சாப்பிட்டேன். பஸ் லேட்டு. காலையில காரைக்கால்லே கிளம்பினா, சாயங்காலம் மெட்ராஸ் போயிடலாம் என்று உங்கப்பா சொன்னார். பஸ் பிரேக் டவுன் ஆயிடுச்சு. அதான் அகாலத்திலே வந்து.."

"அதனால என்ன.. பரவாயில்லை."

பிரட்ஜை திறந்து பார்த்தான் ஆனந்த். தோசை மாவு இருந்தது. நான்கு தோசை சுட்டு. மிளகாய் பொடி, எண்ணெய், தண்ணீர் கொண்டு வந்து டேபிள் மேல் வைத்தான்.

"சாப்பிடுங்க. இதோ வர்றேன்" என்றவன் வாசல் பக்கம் மொபைலுடன் போனான்.

திரும்பி வந்த போது சாப்பிட்டு முடித்து, கை நிறைய பேப்பர்களுடன் காத்திருந்தார் ராமசாமி.

மெல்ல மெல்ல எனக்கு வெளிநாடு மீது வெறுப்பும் வராமல் இருக்கவில்லை.

அப்பா தீவிரமாக வரன்களை தேடிக்கொண்டு இருந்தார். அவருக்கு மிகுந்த கோபம் என்மீது. கைகூடி வந்த ஒரு வரனை நான் நிராகரித்து விட்டேன். காரணம் மாப்பிள்ளை போனில் சொன்ன தகவல்தான். "ரெண்டு பேரும் ஃபாரின் போய் செட்டிலாகிவிடலாம். நிம்மதியா காசு பார்க்கலாம்" என்பதுதான்.

வாழ்க்கை கவிதைப் போல ஓடிக்கொண்டிருந்தது. ஒரு நாள் மொத்த உலகமும் ஸ்தம்பிக்கும்படியான செய்தி வந்தது. சைக்கிளில் சென்ற அப்பா விபத்தினை சந்தித்தார். ஐசியுவில் சேர்த்துவிட்டார்கள். டாக்டர்கள் எங்கே அடி, என்ன ஆனது என ஒன்றும் சொல்லவில்லை. யாரையும் பார்க்கவும் அனுமதிக்க வில்லை. வரன் பார்க்கத்தான் எங்கோ போயிருக்கார். அவர் கையில் இருந்த மாப்பிள்ளை போட்டோக்கள் அதையே காட்டின. அலுவலகத்திற்கு தகவல் சொல்லி விட்டேன். கையில் இருந்த மொத்த காசும் கட்டி விட்டேன்.

மருத்துவமனையில் சேர்த்த இரண்டு மணி நேரத்தில் நான் கவனித்துக் கொள்ளும் பெரியவர்கள் எல்லோருமே மருத்துவமனைக்கு வந்து விட்டார்கள். இதனை நான் எதிர்பார்க்கவேயில்லை. அலுவலகத்திற்கு செய்தி சொன்னதும், அவர்கள் இன்று நான் வீட்டிற்கு நேரடியாக வர இயலாது என தகவல் சொல்லி இருக்கின்றார்கள். எல்லோரும் மருத்துவமனை விலாசம் கேட்டுவிட்டு வந்துவிட்டார்கள். ஒரு சுவாரஸ்யம் என்னவெனில் வந்திருந்தவர்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு அறிமுகம் இல்லாதவர்கள். அவர்களை இணைக்கும் இரண்டு புள்ளிகள் ஒன்று முதுமை, மற்றொன்று நான். **ICU** வாசலில் ஒருத்தருக்கு இவ்வளவு பேறா என விரட்டிவிட்டார்கள். எல்லோரையும் எல்லோருக்கும் அறிமுகம் செய்து வைத்தேன்.

சரஸ்வதி அம்மா ஒரு ப்ளாஸ்கில் டீ எடுத்து வந்திருந்தார். ஆனால், அவர் இத்தனை பேரை எதிர்பார்க்க வில்லை. அவர்கள் எல்லோரும் எளிதில் நண்பர்களாகி விட்டார்கள். தங்கள் கதைகளையும் மருத்துவமனை அனுபவங்களையும் பேச ஆரம்பித்து விட்டார்கள். தோள்மீது கைப்போட்டு கல்லூரி நண்பர்களைப்போல தாமோதரன் சாரும் மோசஸ் சாரும் பேசுவதை பார்க்கவே மனதிற்கு இதமாக இருந்தது. மாலையில்தான் சாயர் சார் வந்தார். என்னிடம் என்ன விபத்து என்றெல்லாம் விசாரிக்க வில்லை. நேராக முதன்மை டாக்டர் அறைககுச் சென்றார். அன்றுதான் சாயர் ஒரு டாக்டர் என்ற விஷயம் தெரியும். ரிப்போர்டஸ்களை பலபவந்தமாக பேசி வாங்கி எல்லா டாக்டர்களுக்கும் டோஸ் விட்டார். ஏதோ சொதப்பி இருக்கின்றார்கள். உடனே **ICU** பரபரப்பானது. என்னிடம் வந்து "ஆபரேஷன் உடனடியா செய்யனும். ஐம்பதாயிரம் கட்டுங்க.." என்று சொல்லிவிட்டனர். கையிருப்பு தீர்ந்து விட்டது. அலுவலகத்தில் கேட்டதற்கு பெரிய ப்ராசஸ். இன்று கிடைக்காது என சொல்லிவிட்டார்கள். தோழிகளுக்கு போன் அடிப்பதற்குள் சரஸ்வதி அம்மா பில்லை பிடிங்கி பணம் கட்டச் சென்றார்.

"நாளைக்கு பணம் வந்ததும் கொடுத்திட்றேம்மா.."

"நான் கேட்டேனா?" என்றார் புன்னகைத்தபடியே.

அந்த நொடிதான் உடைந்து போனேன். ஆஸ்பிட்டலில் மனங்களின் நறுமணம் கமழ்வதை நுகர்ந்தேன். எதற்காக இந்த வேகமான ஓட்டம் என்றே புரியவில்லை. எதனை எதிர்பார்க்கின்றது மனது? இன்னொரு அதிர்ச்சி காத்துக்கொண்டிருந்தது. உடனடி ஆபரேஷன் என்பதால் உடனடியாக ரத்தம் தேவை என்று சொல்லிவிட்டார்கள். ரத்தம் கொடுத்தது சாயர் சார்தான். ரத்தம் கொடுத்தவர் மெல்ல நிதானமாக வெளியே வந்தார். காபி வாங்கிச்சென்றேன். வராண்டாவில் அமர்ந்தார். அருகினில் அமர்ந்தேன். அவர் என் கைகளைப்பற்றி, "காலையிலேயே இந்த அப்பாகிட்டே ஒரு வார்த்தை சொல்லி இருக்கலாமில்ல" வழிந்தோடியது அறநீர்.

******

பைக்கில் அழைத்துச்சென்று, காரைக்கால் பஸ்சில் ஏற்றி விட்டான். டிக்கட் வாங்க என்று ஐநூறு ரூபாயை பிடிவாதமாக அவர் சட்டைப் பையில் திணித்தான்.
"ஒரு நிமிஷம்.." என்று போனவன், ஒரு பிளாஸ்டிக் பையுடன் வந்தான்.
"ஊர் போய் சேர எத்தனை நேரம் ஆகுமோ, வழியிலே சாப்பிட்டுக்குங்க.." என்று டிபன் பொட்டலம், தண்ணீர் பாட்டில் அடங்கிய பையை அவரிடம் கொடுத்தான்.
அவர் நெகிழ்ந்தார்.
"என்னாலே உனக்கு ரொம்ப சிரமம்ப்பா.. லீவு வேறே போட்டுட்டு. எனக்காக அலைஞ்சிருக்கே.. ஊருக்கு போனதும் முதல் வேலையா உங்கப்பாவைப் பார்த்து நன்றி சொல்லனும்."
ராமசாமி உணர்ச்சி வசப்பட்டு பேசிக்கொண்டே போக, அமைதியாக அவர் பக்கத்தில் அமர்ந்தான், ஆனந்த்.
"ஒரு விஷயம் சார்.. நீங்க தேடி வந்த ஆனந்த் நான் இல்லை.."
ராமசாமி திடுக்கிட்டார். "என்னப்பா சொல்றே?"
"ஆமாம். நீங்க அட்ரஸ் தப்பா வந்துட்டீங்க. நான் இருக்கிறது, யோகானந்தம் நகர் எக்ஸ்டன்ஷன். நீங்க மெயின் யோகானந்தம் நகர் போயிருக்கணும். அது கிட்டத்தட்ட 2 கி.மி. தொலைவுல இருக்கு."
ராமசாமிக்கு குப்பென வியர்த்தது. "அடடா தப்பு செய்துட்டேனே.. ரொம்ப ரொம்ப சாரிப்பா.. நான் வந்தவுடனேயே சொல்லியிருக்கலாமே" அனாவசியமா எதுக்கு எனக்காக மெனக்கெட்டு.."
அவரைத் தடுத்தான் ஆனந்த்.
"நீங்க வந்தது ராத்திரி பத்தரை மணிக்கு.. மெட்ராஸ்ல இருக்கிறவங்களுக்கே இங்க அட்ரஸ் தேடி கண்டு பிடிக்கிறது கஷ்டம். நீங்க மெட்ராசுக்கு புதுசு வேற. அதிலேயும், நீங்க வந்த காரியத்தை பத்தி தெரிஞ்சதுலே, எனக்கு மனசு சங்கடமா போயிட்டது. அதான் உங்களை சாப்பிட சொல்லிட்டு, லெட்டர்லே இருந்த நம்பருக்கு கால் போட்டு பேசினே். நீங்க அட்ரஸ் மாறி வந்த விஷயம் கேட்டு, அதான் அந்த ஆனந்தோட அப்பா ரொம்பவே வருத்தப்பட்டார். அவர்கிட்ட அவர் பிள்ளையோட நம்பர் கேட்டு வாங்கி பேசினேன். ஆனா, மொபைல் போன்ல பேசினது ஆனந்தோட மனைவி. அவர் ஆபிஸ் விஷயமா டில்லி போயிருக்காராம். வர ஒரு வாரம் ஆகுமாம். அப்பதான் முடிவு செய்தேன். நேரடியா நானே உங்களுக்கு உதவி செய்திடலாம்னு.. எந்த ஆனந்துன்னா என்ன சார்.. நஷ்ட ஈடு உங்களுக்கு கிடைக்க, நான் உதவியா இருந்தேன்னு, நிம்மதி என் மனசிலே நிறைஞ்சு இருக்கு. அது போதும் சார்."
டிரைவரும் கண்டக்டரும் பஸ்சில் ஏற, எழுந்தான் ஆனந்த். அவன் கைகளைப் பற்றி கண்ணில் ஒற்றிக்கொண்டார் ராமசாமி. அவன் உள்ளங்கை ராமசாமியின் கண்ணீரால் நனைந்தது.
"நல்லா இருப்பா.. நல்லா இரு.. வேறென்ன சொல்றது?"
பதினைந்து வருடங்களுக்கு முன் செத்துப்போன தன் அப்பாவை நினைத்துக் கொண்டான் ஆனந்த்.

****